[1st February 1963

திரு. வை. சங்கரன் : கோவில்களிலே மழைக்குக்கூட ஒதுங் காத மெம்பர்களுக்கு, அர்ச்சகர்கள் ஆகமம், அர்ச்சனை, பத்தரி இவைகளைத் தெரிந்துகொண்டு பூஜை செய்கிறார்கள் என்பது தெரியாது என்று அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்படியும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இதிலே அக்கறை எடுத்துக்கொள்வதை உப கேள்வி கேட்ட அங்கத்தினர் பாராட்ட வேண்டும்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT.

THE MADRAS URBAN LAND TAX BILL, 1963.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Urban Land Tax Bill, 1963.

III.—GOVERNMENT BILL.

THE MADRAS URBAN LAND TAX BILL, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I beg leave to introduce the Madras Urban Land Tax Bill, 1963.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Urban Land Tax Bill, 1963."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

* **திரு. நா. சௌந்திரபாண்டியன் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் இந்த சட்ட மன்ற பேரவைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு ஒருசில வார்த்தைகள் பேச முன் வந்திருக்கின்றேன்.

சென்ற நான்கு மாதங்களாக சீன ஆக்கிரமிப்பின் காரணமாக நமது நாட்டின் முன்னேற்றத் திட்டங்கள் பல தடைப்பட்டு இருக் கின்றன என்பது ஓரளவு உண்மையே. ஆனாலும் நம்முடைய நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமையின் காரணமாக,